செ.வெ.எண்: 803 நாள்: 25.11.2019

# குவைத் நாட்டில் வீட்டு வேலை பணிக்காக பெண் பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

குவைத் நாட்டில் வீட்டு வேலை பணிக்காக பெண் பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு அரசின் கீழ் செயல்பட்டு வரும் வெளிநாடு மனிதவள கழகத்தின் பத்திரிக்கை செய்திக் குறிப்பில் குறிப்பிட்டவாறு குவைத் நாட்டில் வீட்டு வேலை பணியாளராக (House Maid) பணிபுரிய 31 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட 100 பெண் பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். ஏற்கனவே, அரபு நாடுகளில் வீட்டு வேலை செய்த அனுபவம் உள்ளவர்களுக்கு மாத ஊதியம் ரூ.28,000, முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு மாத ஊதியம் ரூ.25,800 மற்றும் உணவு, இருப்பிடம் விமானப்பயணச்சீட்டு குவைத் நாட்டின் வேலையளிப்பவரால் வழங்கப்படும்.

விருப்பமும் தகுதியும் உள்ளவர்கள் தங்களின் சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வி மற்றும் செல்லத்தக்க பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் ஒரு புகைப்படத்துடன் omchousemaid2019@gmail.com என்ற மின்னஞ்சல் அல்லது தபால் வாயிலாக அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், எண் 42, ஆலந்தூர் சாலை, திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை 600 032 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குவைத் நாட்டில் வீட்டு வேலைக்கு பணியமர்த்தும் நிறுவனம் அந்நாட்டின் அரசு சார்ந்த நிறுவனமாகும். இந்நிறுவனம் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள www.emigrate.gov.in என்ற வலைதளத்தின் விதிமுறைகளைப் பின்பற்றி மேற்குறிப்பிட்ட பணிக்கு உரிய

நபர்களை தேர்வு செய்ய உள்ளது. அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் குவைத் நாட்டில் உள்ள அந்நிறுவனத்தின் முழுவிவரங்களை சேகரித்து அதன் நம்பகத்தன்மையை உறுதி செய்துள்ளது.

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், குவைத் நாட்டின் வேலையளிக்கும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு அங்கு பணியமர்த்தப்பட்ட பெண் பணியாளர்களின் நலனை பாதுகாக்கும். குவைத்திற்கு செல்லும் பெண் பணியாளர்கள் இந்நிறுவனத்தின் வலைதளத்தில் தங்களது கருத்துக்களையும், குறைகளையும் பதிவு செய்வதற்கு உரிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் 8220634389 என்ற தொலைபேசி எண் வாயிலாகவும் இந்நிறுவனத்தினை தொடர்பு கொண்டு தங்களது கருத்துக்கள் மற்றும் குறைகளை தெரிவிப்பதோடு தேவைப்படும் உதவிகளையும் 24 மணி நேரமும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இந்நிறுவனத்தால் வெளியிடப்படவுள்ள Mobile App-ஐ பதிவிறக்கம் செய்து அதன் மூலமாகவும் இந்நிறுவனத்தை தொடர்பு கொண்டு தங்களது கருத்துக்கள் மற்றும் குறைகளை பதிவு செய்வதோடு வேண்டிய உதவிகளை பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் ஊதியம் மற்றும் பணி விவரங்களை அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவன வரைதளம் மூலமாகவும் www.omcmanpower.com மற்றும் 044-22505886, 22502267, 9566239685 என்ற தொலைபேசி எண்களின் மூலமாகவும் அறிந்துகொள்ளலாம். இந்திய அரசின் வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர் எண்.Rc.No.B-0821/CHENNAI/CORPN/1000+/5/308/84 ஆகும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**